**கத்தார் நாட்டு அதிபரின் இந்திய அரசுமுறைப் பயணம் (பிப்ரவரி 17-18, 2025)**

பிப்ரவரி 15, 2025

பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களின் அழைப்பை ஏற்று, கத்தார் நாட்டின் அதிபர் ஷேக் தமிம் பின் ஹமத் அல்-தானி 2025 பிப்ரவரி 17-18 தேதிகளில் இந்தியாவிற்கு அரசுமுறைப் பயணம் செய்ய உள்ளார். அவருடன் அமைச்சர்கள், மூத்த அதிகாரிகள் மற்றும் வணிகக் குழு உட்பட உயர்மட்டக் குழுவினர்கள் வருவார்கள். இது இந்தியாவிற்கு கத்தார் அதிபரின் இரண்டாவது வருகையாக இருக்கும். இதற்கு முன்னர் அதிபர் அவர்கள் 2015 மார்ச் மாதம் அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்தார்.

2. 025 பிப்ரவரி 18-ம் தேதி, கத்தார் நாட்டின் அதிபருக்கு ஜனாதிபதி மாளிகையில் சிறப்பு வரவேற்பு வழங்கப்படும். அவரது வருகையின் போது, மாண்புமிகு ஜனாதிபதி திருமதி. திரௌபதி முர்மு அவர்களை அதிபர் சந்திக்க உள்ளார் பிறகு மரியாதை நிமித்தமாக அவருக்கு விருந்து ஏற்பாடு செய்யப்படும். இருதரப்பு உறவுகளின் பல்வேறு அம்சங்களை பற்றி பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுடன் மாண்புமிகு அதிபர் பேச்சுவார்த்தை நடத்துவார்.

3. இந்தியாவும் கத்தாரும் நட்பு, நம்பிக்கை மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றின் ஆழமான வரலாற்று உறவுகளைக் கொண்டுள்ளன. வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, தொழில்நுட்பம், கலாச்சாரம் மற்றும் மக்கள் நலன் உறவுகள் உள்ளிட்ட இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் தொடர்ந்து வலுப்படுத்தப்பட்டுள்ளன. கத்தாரில் வசிக்கும் இந்திய சமூகம் கத்தாரின் மிகப்பெரிய வெளிநாட்டு சமூகத்தை உருவாக்குகிறது, மேலும் கத்தாரின் முன்னேற்றம் மற்றும் மேம்பாட்டில் அதன் நேர்மறையான பங்களிப்புக்கு பாராட்டப்படுகிறது. மாண்புமிகு அதிபர் அவர்களின் பயணம்

வளர்ந்து வரும் பன்முக கூட்டாண்மைக்கு மேலும் வேகத்தை வழங்கும்.

புது தில்லி

பிப்ரவரி 15, 2025